உள்ளக அலுவல்கள், வடமேல் மாகாண மற்றும்

கலாச்சார அலுவல்கள் அமைச்சு

# தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

## செயலாற்றுகை அறிக்கை – 2015

தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

கொழும்பு 07

# தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

## தூர நோக்கு

சௌபாக்கியமான எதிர்காலத்திற்காக தேசிய மரபுரிமைகளைப் பேணிப் பாதுகாத்தல், ஊக்குவித்தல், பிரச்சாரம் செய்தல்

## இலட்சியப் பணி

கலாச்சாரம் மற்றும் இயற்கை உரிமை வளங்களை விஞ்ஞான ரீதியாகவும், ஒழுங்குமுறையாகவும் பாதுகாத்தல் மற்றும் மக்களின் கணிப்பீடு, கல்வி, ரசனை ஆகியவற்றிற்காக முன்னின்று உழைத்தல்

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் | - | 011-2695366 |
| தொலை நகல் | - | 011-2692092 |
| பொது தொலைபேசி இலக்கம் | - | 011-2694767 |
| மின்னஞ்சல் முகவரி | - | nmdep@slt.lk |
| இணையத்தள முகவரி | - | www.museum.gov.lk |

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 01 |
| 2. | நிதி ஒதுக்கீடு | 02 |
| 3. | தாபனச் செயற்பாடுகள் | 03-08 |
| 4. | 2015ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் | 08 |
| 5. | நூதனசாலைப் பார்வையாளர்கள் பற்றிய விபரங்கள் | 09 |
| 6. | ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகள் | |
| | 6(அ) கலாசாரப் பிரிவு | 10-15 |
| | 6(அ)1. மனித இனஇயல் பிரிவு | |
| | 6(அ)2. மானிடவியல் பிரிவு | |
| | 6(ஆ) விஞ்ஞானப் பிரிவு | 15-20 |
| | 6(ஆ)1. தாவரவியல் பிரிவு | |
| | 6(ஆ)2. பூச்சியியல் பிரிவு | |
| | 6(ஆ)3. புவிச்சரிதவியல் பிரிவு | |
| | 6(ஆ)4. விலங்கியல் பிரிவு | |
| 7. | கல்வி, கல்வி வெளியீட்டுப் பிரிவு | 21-22 |
| 8. | தேசிய நூதனசாலைக் கேட்போர் கூடம் | 22 |
| 9. | தேசிய நூதனசாலை நூலகம் | 22 |
| 10. | புகைப்படப் பிரிவு | 23 |
| 11. | பேணிப் பாதுகாத்தல் பிரிவு | 23-24 |
| 12. | கண்காட்சிகளின் திட்டமிடல் பிரிவு | 24-25 |
| 13. | தகவல் தொழில்நுட்பப் பிரிவு | 25 |
| 14. | நூதனசாலை நடவடிக்கைகள் | 26-28 |
| | 14(அ) கொழும்பு தேசிய நூதனசாலை | |
| | 14(ஆ) தேசிய இயற்கையியல் நூதனசாலை | |
| | 14(இ) காலி சமுத்திர நூதனசாலை | |
| | 14(ஈ) கண்டி தேசிய நூதனசாலை | |
| | 14(உ) ஒல்லாந்த நூதனசாலை | |
| | 14(ஊ) இரத்தினபுரி தேசிய நூதனசாலை | |
| | 14(எ) அநுராதபுரம் நாட்டார் நூதனசாலை | |
| | 14(ஏ) காலி தேசிய நூதனசாலை | |
| | 14(ஐ) சுதந்திர ஞாபகார்த்த நூதனசாலை | |
| 15. | 2015 ஆம் வருட வருமானங்கள் | 29-30 |
| 16. | புகைப்படங்கள் | |
| | புகைப்படம் - இல. 01 மஹகமபுர றுகுணு பாரம்பரிய அருகாட்சியகம் - அறை இலக்கம் 02 (கலை மற்றும் கட்டிடக்கலை) | |
| | புகைப்படம் - இல. 02 மஹகம்புர றுகுணு பாரம்பரிய அருகாட்சியகம் - அறை இலக்கம் 04 (றுகுணுவில் முன்னோடி குணஇயல்பு) | |

**2015 ஆம் ஆண்டுக்கான தேசிய நூதனசாலைகள் பணிப்பாளரின் செயலாற்றுகை அறிக்கை**

**(1). அறிமுகம்**

ஒரு பரிபூரண நூதனசாலைச் சேவையை நாட்டுக்குப் பெற்றுக் கொடுப்பதே தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் முக்கிய நோக்கமாகும். இந் நோக்கத்தினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு செயற்படும் போது, பொதுவாக ஒரு நூதனசாலையுடன் தொடர்புபட்ட பலவித விடய வழிகளிலிருந்தும் மிகப் பொருத்தமான விடயவழியினைத் தேர்ந்தெடுப்பது திணைக்களத்தின் முக்கிய கடமையாகவிருக்கின்றது. இத் தேர்ந்தெடுத்தல் தொடர்பான திட்டங்களை ஒழுங்கமைக்கும்போது திணைக்களத்திற்குப் பெற்றுக் கொள்ளக்கூடிய பயன்பாடுகளையும், நாட்டின் தேவைப்பாடுகளையும் கவனத்திற் கொள்ளப்படும்.

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தினால் இத் திட்டங்கள் தயாரிக்கும் போது, பொதுவாக நாடளாவிய ரீதியில் மிக அதிகமான சேகரிப்புக்களை உள்ளடக்கிய கொழும்பு தேசிய நூதனசாலையினை மையமாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது. இது தவிர, கொழும்பு தேசிய இயற்கையியல் நூதனசாலை, கண்டி தேசிய நூதனசாலை, இரத்தினபுரி தேசிய நூதனசாலை, காலி தேசிய நூதனசாலை, காலி தேசிய சமுத்திர நூதனசாலை, புறக்கோட்டை ஒல்லாந்த நூதனசாலை, அநுராதபுரம் நாட்டார் நூதனசாலை, சுதந்திர ஞாபகார்த்த நூதனசாலை, மாகம்புர றுஹுணு மரபுரிமை நூதனசாலை ஆகிய பல நூதனசாலைகள் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருவதுடன், அந்த நூதனசாலைகளின் மூலம், அவ்வப் பிரதேசங்களுக்குரிய கலாசார, சுற்றாடல், இயற்கை வளங்கள், மரபுரிமைகள் என்பவை எடுத்துக் காட்டப்படுகின்றன. இது மாத்திரமன்றி, நடமாடும் நூதனசாலைகளின் சேவைகளினாலும் திணைக்களத்தின் செயலாற்றுகைத் திறன் மேலும் பரந்தளவில் இடம்பெற்று வருகின்றது. இதற்கேற்ப தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் செயற்பாடுகளை கீழ்வருமாறு பகுப்பாய்வு செய்து காட்டலாம்.

i. தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பிரிவுகளாகிய ஆரம்ப வரலாற்றுக் காலம், மனித இனயியல், மானிடவியல், விலங்கியல், பூச்சியியல், புவிச்சரிதவியல், தாவரவியல், பாறை மூலயியல் ஆகிய பிரிவுகளைச் சார்ந்த பொருட்களையும் மற்றும் அவற்றின் மாதிரிகளையும் சேகரித்தல், பதிவு செய்தல், பாதுகாத்தல்.

ii. மேற் கூறிய துறைகள் சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளல்.

iii. அறிஞர்களினதும், பயிலுநர்களினதும் பயனுக்காக ''ஸ்போலியா செலனிகா'' எனும் தொகுப்பாய்வு நூல் மற்றும் சஞ்சிகைகள், தனிவிடய தொகுப்புக்கள் ஆகியவற்றை வெளியிடல்.

iv. நாட்டின் வரலாறு, கவின்கலைகள், இயற்கை விஞ்ஞானம் ஆகிய விடயங்கள் தொடர்பான அறிவை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் விரிவுரைகள், கண்காட்சிகள், கருத்தரங்குகள் என்பன உள்ளடங்கிய கல்வித் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளைச் செயல்முறைப்படுத்துதல்.

**(2) நிதி ஒதுக்கீடு**

**(அ) மீண்டுவரும் செலவு**

| | **ஒதுக்கப்பட்ட நிதி** | **2015.12.31 ஆந் திகதிக்கு நிதிச் செலவினம்** | **வளர்ச்சி** |
|---|---|---|---|
| பொது நிர்வாகம் | ரூபா 28,695,000 | ரூபா 27,503,302 | 96 % |
| நூதனசாலைக் கல்வி | ரூபா 40,481,000 | ரூபா 36,713,000 | 91 % |
| நூதனசாலைச் சேவைகள் | ரூபா 92,260,000 | ரூபா 85,636,921 | 93 % |
| மொத்தம் | ரூபா 161,436,000 | ரூபா 149,853,805 | 93 % |

**(ஆ) மூலதனச் செலவு**

| | **ஒதுக்கப்பட்ட நிதி** | **2015.12.31 ஆந் திகதிக்கு நிதிச் செலவினம்** | **வளர்ச்சி** |
|---|---|---|---|
| பொது நிர்வாகம் | ரூபா 6,470,000 | ரூபா 5,908,502 | 91 % |
| நூதனசாலைக் கல்வி | ரூபா 11,250,000 | ரூபா 11,133,000 | 99 % |
| நூதனசாலைச் சேவைகள | ரூபா 130,140,000 | ரூபா 101,349,216 | 78 % |
| மொத்தம் (மூலதனச் செலவு) | ரூபா 147,860,000 | ரூபா 118,391,280 | 80 % |
| மொத்தம் | ரூபா 309,296,000 | ரூபா 268,245,085 | 87 % |

**(இ) 2015 ஆம் ஆண்டில் நூதனசாலைகள் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள்**

- விடயத் தலைப்பு இலக்கம் - 2102 - வீட்டுபகரணங்களும் அலுவலக உபகரணங்களும்

| **கருத்திட்டங்கள்** | **செலவு** |
|---|---|
| பொது நிர்வாகம் | ரூபா 784,745.00 |
| நூதனசாலைக் கல்வி | ரூபா 799,431.00 |
| நூதனசாலைச் சேவைகள | ரூபா 4,199,999.84 |

- விடயத் தலைப்பு இலக்கம் - 2103 - இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும்

| கருத்திட்டங்கள் | செலவு |
|---|---|
| பொது நிர்வாகம் | ரூபா 1,149,940.00 |
| நூதனசாலைக் கல்வி | ரூபா 194,865.00 |
| நூதனசாலைச் சேவைகள | ரூபா 914,936.36 |

**(ஈ) 2015 ஆம் ஆண்டின் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பிரதான கருத்திட்டங்கள்**

| | கருத்திட்டங்கள் | 2015 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகள் (மில்லியன் ரூபா) | 2015.12.31 ஆந் திகதிக்கு நிதி நிலைமை | 2015.12.31 ஆந் திகதிக்கு பௌதீக நிலைமை |
|---|---|---|---|---|
| 01 | கொழும்பு தேசிய நூதனசலையில் பேணிப் பாதுகாத்தல் ரீதியான பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் | 57.7 | 59% | 67% |
| 02 | இயற்கையியல் நூதனசாலையில் அஸ்திகள் விஞ்ஞான கூடம் அமைத்தல் | 10 | 87% | கட்டிடம் அமைத்தல் 100%<br>கண்காட்சிகள் அமைத்தல் 60% |
| 03 | இரத்தினபுரி தேசிய நூதனசாலையில் உயிரின வகைகள் பூங்கா அமைத்தல் | 6.5 | 99% | 100% |
| 04 | பிரதேச மட்ட நூதனசாலைகளை முன்னேற்றுதல் | 28 | 99% | 90% |
| 05 | மாகம்புர றுஹுணு மரபுரிமை நூதனசாலை அமைத்தல் | 13 | 94% | 100% |

### (3) பொது செயற்பாடுகள்

(அ) 2015 ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 400 ஆகும்.
(ஆ) தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட தரங்களின் எண்ணிக்கையும், தற்போதைய பணிக்குழுவினரும்

| பதவி | சேவை | அரச நிர்வாக சுற்று நிருப இல.06.'.2006 இன் படி சம்பளத் | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் ** | இலங்கை விஞ்ஞான சேவை – விசேட | SL 3 | 1 | 0 | 1 |
| மேலதிக பணிப்பாளர் நாயகம் ** | இலங்கை நிர்வாக சேவை 1 | SL 1 | 1 | 0 | 1 |
| மேலதிக பணிப்பாளர் நாயகம் ** | இலங்கை விஞ்ஞான சேவை 1 | SL 1 | 1 | 0 | 1 |
| பிரதான கணக்காளர் ** | இலங்கை கணக்காளர் சேவை | SL 1 | 1 | 0 | 1 |
| பிரதான உள்ளக கணக்காய்வாளர் ** | இலங்கை கணக்காளர் சேவை | SL 1 | 1 | 0 | 1 |
| பணிப்பாளர் * | இலங்கை விஞ்ஞான சேவை | SL 1 | | 1 | |
| பணிப்பாளர் (விஞ்ஞானம்) ** | இலங்கை விஞ்ஞான சேவை | SL 1 | 1 | 0 | 1 |
| பணிப்பாளர் (கலாச்சார) ** | இலங்கை விஞ்ஞான சேவை | SL 1 | 1 | 0 | 1 |
| பிரதி / உதவிப் பணிப்பாளர் | இலங்கை நிர்வாக சேவை III/II | SL 1 | 1 | 1 | 0 |
| பிரதி / உதவிப் பணிப்பாளர் (மனித இனயியல்) | இலங்கை விஞ்ஞான சேவை III/II | SL 1 | 1 | 1 | 0 |
| பிரதி / உதவிப் பணிப்பாளர் (மானிடவியல்) | இலங்கை விஞ்ஞான சேவை III/II | SL 1 | 1 | 0 | 1 |
| பிரதி / உதவிப் பணிப்பாளர் (தாவரவியல்) | இலங்கை விஞ்ஞான சேவை III/II | SL 1 | 1 | 0 | 1 |
| பிரதி / உதவிப் பணிப்பாளர் (விலங்கியல்) | இலங்கை விஞ்ஞான சேவை III/II | SL 1 | 1 | 1 | 0 |
| பிரதி / உதவிப் பணிப்பாளர் (பூச்சியியல்) | இலங்கை விஞ்ஞான சேவை III/II | SL 1 | 1 | 1 | 0 |
| பிரதி / உதவிப் பணிப்பாளர் (நூதனசாலைச் சேவைகள்) | இலங்கை விஞ்ஞான சேவை III/II | SL 1 | 1 | 0 | 1 |
| கணக்காளர் | இலங்கை கணக்காளர் சேவை III/II | SL 1 | 1 | 1 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிர்வாக அலுவலர் | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை (அதிஉயர்) | MN 7 | 1 | 1 | 0 |
| நூலகர் | இலங்கை நூலகர் சேவை (அதிஉயர்) | MN 7 | 1 | 0 | 1 |
| மொழி பெயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் சேவை II/I | MN 6 | 2 | 0 | 2 |
| நூதனசாலை அதிகாரி | திணைக்களத்திற்குரிய சேவை | MN 4 | 5 | 5 | 0 |
| சம்பிரதாயக் கலைகள் உதவியாளர் | திணைக்களத்திற்குரிய சேவை | MN 4 | 1 | 1 | 0 |
| கண்காட்சி திட்டமிடல் அலுவலர் | திணைக்களத்திற்குரிய சேவை | MN 4 | 1 | 0 | 1 |
| வரவு செலவு உதவியாளர் | இணைந்த சேவைகள் III/II/I | MN 4 | 1 | 1 | 0 |
| பேணிப் பாதுகாத்தல் அலுவலர் | இணைந்த சேவைகள் III/II/I | MN 4 | 2 | 2 | 0 |
| கொள்வனவு அலுவலர் | இணைந்த சேவைகள் III/II/I | MN 4 | 1 | 1 | 0 |
| ஆய்வு உதவியாளர் | இணைந்த சேவைகள் III/II/I | MN 4 | 8 | 8 | 0 |
| ஆய்வு உதவியாளர் | திணைக்களத்திற்குரிய சேவை | MN 4 | 6 | 1 | 5 |
| கல்வி ஊக்குவிப்பு அலுவலர் | இணைந்த சேவைகள் | MN 4 | 18 | 17 | 1 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | இணைந்த சேவைகள் | MN 4 | 1 | 1 | 0 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை III/II/I | MT 1 | 1 | 0 | 1 |
| நிகழ்ச்சிநிரல் உதவியாளர் | இணைந்த சேவைகள் III/II/I | MN 4 | 1 | 1 | 0 |
| அபிவிருத்தி உதவியாளர் | இணைந்த சேவைகள் III/II/I | MN 4 | 2 | 2 | 0 |
| அபிவிருத்தி அலுவலர் | அபிவிருத்தி அலுவலர் சேவை III/II/I | MN 4 | 13 | 7 | 6 |
| அபிவிருத்தி அலுவலர் (தமிழ்) | அபிவிருத்தி அலுவலர் சேவை III/II/I | MN 4 | 7 | 0 | 7 |
| பிரதான பாதுகாப்பு அலுவலர் | திணைக்களத்திற்குரிய சேவை | MN 4 | 1 | 0 | 1 |
| நூதனசாலை பாதுகாப்பு அலுவலர் | திணைக்களத்திற்குரிய சேவை | MN 4 | 10 | 4 | 6 |
| பூச்சியியல் உதவியாளர் | இலங்கை தொழில்நுட்ப சேவை III/II/I | MN 3 | 2 | 0 | 2 |
| தாவரவியல் உதவியாளர் | இலங்கை தொழில்நுட்ப சேவை III/II/I | MN 3 | 1 | 0 | 1 |
| புவிச்சரிதவியல் உதவியாளர் | இலங்கை தொழில்நுட்ப சேவை III/II/I | MN 3 | 1 | 1 | 0 |
| மானிடவியல் உதவியாளர் | இலங்கை தொழில்நுட்ப சேவை III/II/I | MN 3 | 1 | 0 | 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விலங்கியல் உதவியாளர் | இலங்கை தொழில்நுட்ப சேவை III/II/I | MN 3 | 1 | 0 | 1 |
| பேணிப் பாதுகாத்தல் உதவியாளர் | இலங்கை தொழில்நுட்ப சேவை III/II/I | MN 3 | 1 | 0 | 1 |
| தொழில்நுட்ப அலுவலர் | இலங்கை தொழில்நுட்ப சேவை III/II/I | MN 3 | 2 | 0 | 2 |
| நூலகர் | இலங்கை நூலகர் சேவை III/II/I | MN 3 | 4 | 2 | 2 |
| புகைப்படவியலாளர் | திணைக்களத்திற்குரிய சேவை | MN 3 | 1 | 1 | 0 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை III/II/I | MN 2 | 20 | 12 | 8 |
| தோல் சிற்பிக் கலைஞர் | திணைக்களத்திற்குரிய சேவை | MN 1 | 1 | 1 | 0 |
| மாதிரி உருவக் கலைஞர் | திணைக்களத்திற்குரிய சேவை | MN 1 | 3 | 2 | 1 |
| பாதுகாப்பு உதவியாளர் | திணைக்களத்திற்குரிய சேவை | MN 1 | 5 | 0 | 5 |
| நூதனசாலை வரவேற்பாளர் | திணைக்களத்திற்குரிய சேவை | MN 1 | 1 | 0 | 1 |
| சாரதி | ஒருங்கிணைந்த சாரதி சேவை III/II/I | PL 3 | 8 | 5 | 3 |
| ஆவணங்கள் புனரமைப்பாளர் | திணைக்களத்திற்குரிய சேவை | PL 2 | 9 | 7 | 2 |
| பூந்தோட்ட பொறுப்பாளர் | திணைக்களத்திற்குரிய சேவை | PL 2 | 1 | 1 | 0 |
| மின்சார தொழில்நுட்பவியலாளர் | திணைக்களத்திற்குரிய சேவை | PL 2 | 1 | 1 | 0 |
| தச்சுத் தொழில்நுட்பவியலாளர் | திணைக்களத்திற்குரிய சேவை | PL 2 | 2 | 1 | 1 |
| சித்திரக் கலைஞர் | திணைக்களத்திற்குரிய சேவை | PL 2 | 1 | 1 | 0 |
| கட்டிட அமைப்பாளர் | திணைக்களத்திற்குரிய சேவை | PL 2 | 1 | 1 | 0 |
| செவிப்புல கட்புல உதவியாளர் | திணைக்களத்திற்குரிய சேவை | PL 1 | 1 | 1 | 0 |
| காவல் பரிசோதகர் | திணைக்களத்திற்குரிய சேவை | PL 1 | 1 | 1 | 0 |
| உதவி காவல் பரிசோதகர் | திணைக்களத்திற்குரிய சேவை | PL 1 | 1 | 1 | 0 |
| நூதனசாலைக் காவலர் | திணைக்களத்திற்குரிய சேவை | PL 1 | 50 | 38 | 12 |
| நூலக உதவியாளர் | திணைக்களத்திற்குரிய சேவை | PL 1 | 2 | 2 | 0 |
| நூதனசாலை உதவியாளர் | திணைக்களத்திற்குரிய சேவை | PL 1 | 179 | 129 | 50 |

*புதிய நூதனசாலைகள் சட்டம் நிறைவேற்றப்படும் வரை அமுலில் இருக்கும்.

**திணைக்கள உள்ளக தரப்படுத்தலின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நியமனங்களாகும். புதிய நூதனசாலைகள் சட்டம் நிறைவேற்றப்படும் வரை அமுலில் இருக்க மாட்டாது.

**(இ) புதிதாக நியமனம் பெற்று வந்த அலுவலர்கள்**

| தொடர் இலக்கம் | பெயர் | பதவி | திகதி |
|---|---|---|---|
| 01 | திரு. பீ.கே.பீ.டீ. தயாரத்ன | சாரதி சேவை III | 2015.02.16 |
| 02 | செல்வி ஏ. பியட்றிஸ் | அரச முகாமைத்துவ உதவியாளர் III | 2015.10.12 |
| 03 | செல்வி ஆர்.ஏ.ஏ. பிரியங்கனி | அரச முகாமைத்துவ உதவியாளர் III | 2015.10.12 |
| 04 | செல்வி டீ.கே.சீ. இஸாரா | அரச முகாமைத்துவ உதவியாளர் III | 2015.10.13 |

**(ஈ) 2015 ஆம் ஆண்டில் பதவியுயர்வு பெற்ற அலுவலர்கள்**

ஆரம்ப நிலை (துறை சார்பற்ற) 1 ஆம் தரத்திற்கு உயர்த்துதல்

| பெயர் | பதவி | பதவியுயர்வு அமுல்படுத்தப்பட்ட திகதி |
|---|---|---|
| திருமதி. ஜெனட் ஸ்ரீயானி | நூலக உதவியாளர் | 2015.02.15 |
| திரு. ஏ. தயானந்த | கூடங்கள் பொறுப்பாளர் | 2015.07.25 |

**(உ) 2015 ஆம் ஆண்டில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட நியமனங்கள்**

| பதவிகள் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் ** | 01 |
| மேலதிக பணிப்பாளர் நாயகம் ** | 02 |
| பிரதான கணக்காளர் ** | 01 |
| பிரதான உள்ளக கணக்காய்வாளர் ** | 01 |
| பணிப்பாளர் (விஞ்ஞானம்) ** | 01 |
| பணிப்பாளர் (கலாச்சார) ** | 01 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 01 |

| | |
|---|---|
| நூதனசாலை பாதுகாப்பு அலுவலர் | 03 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 04 |
| பாதுகாப்பு உதவியாளர் | 02 |
| நூதனசாலை வரவேற்பாளர் | 01 |
| சாரதி | 01 |
| நூதனசாலை உதவியாளர் | 38 |

**திணைக்கள உள்ளக தரப்படுத்தலின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நியமனங்களாகும். புதிய நூதனசாலைகள் சட்டம் நிறைவேற்றப்படும் வரை அமுலில் இருக்க மாட்டாது.

**(ஊ) 2015 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற அலுவலர்கள்**

| தொடர் இலக்கம் | பெயர் | பதவி | ஓய்வு பெற்ற திகதி |
|---|---|---|---|
| 01 | திரு. ரீ.டப். பியதாச | மானிடவியல் உதவியாளர் | 2015.04.08 |
| 02 | திரு. கே.பீ.எஸ். பண்டார | கூடங்கள் பொறுப்பாளர் | 2015.06.07 |
| 03 | திரு. எஸ்.எம்.எஸ்.கே. சில்வா | கூடங்கள் பொறுப்பாளர | 2015.09.10 |
| 04 | திரு. கே.எம்.ரீ. பண்டார | கூடங்கள் பொறுப்பாளர | 2015.10.13 |
| 05 | திரு. ஈ.பீ.டீ. குணசேகர | பேணிப்பாதுகாத்தல் உதவியாளர் | 2015.12.23 |

**(எ) இடமாற்றம் பெற்று வந்த அலுவலர்கள்**

| தொடர் இலக்கம் | பெயர் | பதவி | வந்த திகதி |
|---|---|---|---|
| 01 | திரு. டீ.பீ.எம்.என். சம்பத் | சாரதி சேவை III | 2015.03.16 |
| 02 | செல்வி கே. சிறிவர்தன | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை III | 2015.07.06 |
| 03 | திரு. ஆர்.எல்.ஆர். ஜயசேகர | கணக்காளர் சேவை I | 2015.11.08 |

**(ஏ) இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்கள்**

| தொடர் இலக்கம் | பெயர் | பதவி | சென்ற திகதி |
|---|---|---|---|
| 01 | திருமதி. ஈ.எச்.பீ.பீ. சுஜீவா | அபிவிருத்தி அலுவலர் III | 2015.05.22 |
| 02 | திருமதி. ரீ.கே.எம்.கே. சமரசிங்ஹ | அரச முகாமைத்துவ உதவியாளர் III | 2015.06.30 |
| 03 | திருமதி. ஏ.எஸ்.டீ. அலுத்கே | கணக்காளர் சேவை I | 2015.09.14 |
| 04 | திருமதி. ரீ. சந்திராதேவி | அரச முகாமைத்துவ உதவியாளர் I | 2015.09.14 |
| 05 | திருமதி. எச். கீதா ரஞ்சனி | அரச முகாமைத்துவ உதவியாளர் I | 2015.10.12 |

**(ஐ) வெளிநாட்டு மகாநாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள்**

| தொடர் இலக்கம் | பங்குபற்றியவர் | நடைபெற்ற நாடு | திகதி | நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|---|---|---|
| 01 | திருமதி. சனுஜா கஸ்தூரி ஆரச்சி - பணிப்பாளர் (பதிற்கடமை) | சிங்கப்பூர் | 2015.11.25<br>2015.11.27 | ஆசிய நூதனசாலைகள் சங்க மகாநாடு |
| 02 | திருமதி. சனுஜா கஸ்தூரி ஆரச்சி - பணிப்பாளர் (பதிற்கடமை) | பிரான்ஸ் | 2015.05.30<br>2015.06.04 | சர்வதேச நூதனசாலைகள் மகாநாடு |
| 03 | திருமதி. எம்.ஆர்.எம்.பீ.என். குணதிலக்க - உதவிப் பணிப்பாளர் (பூச்சியியற் பிரிவு) | சீனா | 2015.04.12<br>2015.04.22 | Icom International Trainings Centre of Museum Studies |
| 04 | திரு. ரீ.டீ.என். பிரனாந்து - உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | சீனா | 2015.10.09<br>2015.10.31 | Seminar on public Administration for Civil Servants in Asian Counties |
| 05 | திருமதி. என்.எம். நெத்தசிங்ஹ - பேணிப் பாதுகாத்தல் அலுவலர் | இந்தியா | 2015.08.05<br>2015.08.11 | Eighth International Conference on the Inclusive Museum |
| 06 | திருமதி. ஆர்.பீ.மாதவிலதா - கல்வி ஊக்குவிப்பு அலுவலர் | சீனா | 2015.06.07<br>2015.06.17 | Management of the Museum as a non profit organization |
| 07 | திரு. டப்.டீ. அபேசிங்ஹ - புவிச்சரிதவியல் உதவியாளர் | சீனா | 2015.06.07<br>2015.06.17 | Management of the Museum as a non profit organization |
| 08 | திரு. பீ.எல்.ஏ.எச்.எஸ். சேனாதீர - மின்சார தொழில்நுட்பவியலாளர் | சீனா | 2015.11.04<br>2015.11.27 | Maintenance of Facilities for Technicians of Sri lanka Art Theater in 2015 |

**(4) 2015 ஆம் ஆண்டில் நூதனசாலைகள் திணைக்களத்தின் விசேட செயற்பாடுகள்**

- "றுஹுணு தேசத்தின் பெருமை எதிர்காலச் சந்ததியினருக்கு" என்னும் தொனிப்பொருளின் கீழ் தென் மாகாணத்தின் பாரம்பரிய உரிமைகளை எடுத்தியம்பும் வகையில் அமைக்கப்பட்ட மாகம்புர றுஹுணு மரபுரிமை நூதனசாலை முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு 2015.05.08 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் கரங்களால் மக்கள் மயப்படுத்தி ஆரம்பித்து வைக்கப்பட்டது.
- "நீடு நிலைக்கக்கூடிய சமூகத்திற்கான நூதனசாலை" என்னும் தொனிப்பொருளுடன் சர்வதேச நூதனசாலைகள் தின விழா 2015 மே மாதம் 18 ஆந் திகதி வெலிஓயா கிரிஇப்பன்வெவ வித்தியாலயத்தில் இடம்பெற்றது.
- ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தினரால் பாதுக்க பிரதேசத்தில் தொலைத்தொடர்புகள் நூதனசாலை ஒன்று அமைப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டன.
- "ஜனாதிபதி மாளிகையின் அழகு பொதுமக்களது கண்காட்சிக்கு" என்னும் கண்காட்சி தொடர்பான ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டன.

**(5) நூதனசாலைப் பார்வையாளர்கள் பற்றிய விபரங்கள்**

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற நூதனசாலைகளைப் பார்வையிடுவதற்காக 2015 ஆம் ஆண்டில் வருகை தந்துள்ள பார்வையாளர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| நூதனசாலையின் பெயர் | உள்நாட்டு | | வெளிநாட்டு | | பாடசாலை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பெரியோர் | சிறுவர் | பெரியோர் | சிறுவர் | ஆசிரியர் | மாணவர் | இலவச | மொத்தம் |
| கொழும்பு தேசிய நூதனசாலை | 52489 | 14650 | 39640 | 1476 | 8451 | 86697 | 1450 | 204853 |
| தேசிய இயற்கையியல் நூதனசாலை | 10324 | 4064 | 2218 | 185 | 2322 | 27446 | 234 | 46793 |
| ஒல்லாந்த நூதனசாலை | 4212 | 333 | 3149 | 153 | 49 | 773 | - | 8669 |
| இரத்தினபுரி தேசிய நூதனசாலை | 8308 | 2540 | 137 | 03 | 828 | 10593 | 60 | 22469 |
| கண்டி தேசிய நூதனசாலை | மறுசீரமைப்பு நடவடிக்கைகள் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. | | | | | | | |
| காலி தேசிய நூதனசாலை | 8792 | 2966 | 4722 | 236 | 1015 | 14199 | 534 | 32464 |
| தேசிய சமுத்திர நூதனசாலை | 11643 | 4342 | 3806 | 336 | 1371 | 19835 | - | 41333 |
| அநுராதபுரம் நாட்டார் நூதனசாலை | 2609 | 821 | 178 | 02 | 458 | 1895 | 1296 | 7259 |
| சுதந்திர ஞாபகார்த்த நூதனசாலை | 11023 | 3503 | 459 | 29 | 789 | 8716 | 48 | 24567 |
| மாகம்புர றுஹுணு மரபுரிமை நூதனசாலை | 945 | 232 | 18 | - | 43 | 633 | 125 | 1996 |
| மொத்தம் | 110345 | 33451 | 54327 | 2420 | 15326 | 170787 | 3747 | 390403 |

**(6) ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகள்**

**(அ) <u>கலாச்சாரப் பிரிவு :-</u>**

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் கலாச்சாரப் பிரிவு, மற்றும் மனித இனயியல், மானிடவியல் என்னும் இரு பிரிவுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பிரிவுகளையும் சார்ந்த பொருட்களைச் சேகரித்தல், காட்சிக்கு வைத்தல், களஞ்சியப்படுத்தல், பேணிப் பாதுகாத்தல், ஆவணப்படுத்துதல் மற்றும் கற்றல், கற்பித்தல் ஆகிய முக்கிய செயற்பாடுகள் இப்பிரிவுகளினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**(1) மனித இனயியல் பிரிவு**

**(அ) சேகரித்தல் மற்றும் பதிவிடல்**

மனித இனயியல் பிரிவினால் இவ்வாண்டில் சேகரித்த பொருட்களும் அவற்றைப் பதிவு செய்துள்ள விபரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

| | பொருட்கள் | பதிவு செய்யப்பட்ட இலக்கம் | பொருளைப் பெற்றுத் தந்தவரின் விபரமும், திகதியும் | பொருள் பெற்றுக் கொள்ளப்பட்ட விதம் |
|---|---|---|---|---|
| 01 | Fighting Sword | 2015.8.1 | H.R.Bandara,<br>No: 235,<br>ColomboRoad,<br>Waduragala,<br>Kurunegala.<br>2015.06.2015 | Gift |
| 02 | New issuance of five specimen of syrian Bank notes. | 2015.11.1<br>2015.11.2<br>2015.11.3<br>2015.11.4<br>2015.11.5 | Dr. Adib mayaleh,<br>Governof syrian republic ,<br>Central Bank of syria,<br>Damascus.<br>2015.08.31 | Gift |
| 03 | Independent commemorative Coin | 2015.12.1 | S.W.Jayasena,<br>“Sachini stores’’,<br>Godigamuwa Road,<br>Dunagaha.<br>2015.09.30 | purchase<br>(Rs.10000.00) |
| 04 | commemorative Coin of coronation of king Edward VII and queen Alexandra | 2015.13.1 | | |

**(ஆ) ஆய்வுகள்**

மனித இனயியல் பிரிவினால் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. அரும்பொருட்களின் சேகரிப்பு பற்றிய ஆய்வுகள் நடாத்தப்பட்டு அவை பற்றிய பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடல் மற்றும் பெயர்ப்பட்டியல் தயாரித்தல்.
2. மகாவலி அமைச்சினால் வெளியிடப்படவுள்ள இலங்கையின் நீர்ப்பாசன வரலாறு எனப்படும் ஆராய்ச்சி நூலுக்கு "சங்கிராந்திப் பிரிவின் நீர்ப்பாசன நடவடிக்கைகள்" என்னும் தலைப்பிலான ஆய்வறிக்கை சமர்ப்பித்தல்.
3. கலாநிதி பீ.எச்.டீ.எச். த சில்வா அவர்களுடன் இணைந்து, தேசிய நூதனசாலைத் திணைக்களத்தின் பல நூதனசாலைகளிலும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள சுண்ணாம்புக் கில்லோட்டாக்கள் மற்றும் பல்வேறு வகையில் பயன்படுத்தப்படும் பெட்டிகள் பற்றிய ஆய்வுகளின் பிரகாரம் எழுதப்பட்ட "Killota or Chuim (cime) Boxes in Sri Lankan Museums" என்னும் நூலும், " Dutch and other foreign tobacco boxes in the Sri Lankan Museums" என்னும் நூலும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டமை.

**(இ) கண்காட்சிகள்**

மனித இனயியல் பிரிவினால் இவ்வாண்டில் 10 நடமாடும் கண்காட்சிகள் நடாத்தப்பட்டன.

**(ஈ) வெளிக்கள பிரயாணங்கள்**

அம்பாந்தோட்டையின் மாகம்புர றுஹுணு மரபுரிமை நூதனசாலையில் காட்சிக்கு வைப்பதற்கான பொருட்களைத் தயார்ப்படுத்துவதற்கும், தென் மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றைப் புகைப்படங்கள் எடுப்பதற்காகவும் 2014.06.11 தொடக்கம் 2014.06.14 வரை வெளிக்கள பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(உ) வெளிவாரி சேவைகள்**

- நூறு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் 25 ஆய்வாளர்கள் ஆகியோருக்கு ஆய்வு நடவடிக்களுக்காகத் தேவைப்படும் தரவுகள், ஆலோசனைகள் என்பன மனித இனயியல் பிரிவினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.
- களனிப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுப் பீட இறுதியாண்டு மாணவர்களுக்கு நூதனசாலைத் துறை பற்றிய 10 நாள் கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

**(2) மானிடவியல் பிரிவு**

**(அ) சேகரித்தலும், அறிமுகப்படுத்துதலும், ஆவணப்படுத்துதலும்**

| தொடர் இல. | பொருட்கள் | கைப்பற்றப் பட்ட திகதி | கைப்பற்றப் பட்ட விதம் | பதிவு செய்த இலக்கம் | பதிவு செய்த திகதி | கைப்பற்றப் பட்ட பிரதேசம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | செம்பு உலோகம் கலந்த தாச்சி | 2015.04.28 | அன்பளிப்பு | 2015.1.1 | 2015.5.22 | கொழும்பு |
| 02 | 02 தாழிகள் | 2015.05.26 | அன்பளிப்பு | 2015.2.1<br>2015.2.2 | 2015.06.22 | மாத்தறை |
| 03 | 02 பரணிகள் | 2015.05.26 | அன்பளிப்பு | 2015.3.1<br>2015.3.2 | 2015.06.22 | மாத்தறை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 04 | நாக இராட்சத முகமூடி | 2015.05.26 | அன்பளிப்பு | 2015.4.1 | 2015.06.22 | மாத்தறை |
| 05 | வஸ்தி செய்யப்படும் உபகரணம் | 2015.05.26 | அன்பளிப்பு | 2015.5.1 | 2015.06.22 | மாத்தறை |
| 06 | மருந்து இடிக்கும் உரல் | 2015.05.26 | அன்பளிப்பு | 2015.6.1 | 2015.06.22 | மாத்தறை |
| 07 | மருந்துப் பெட்டி | 2015.05.26 | அன்பளிப்பு | 2015.7.1 | 2015.06.22 | மாத்தறை |
| 08 | பாக்கு வெட்டி | 2015.06.12 | அன்பளிப்பு | 2015.9.1 | 2015.07.13 | குருநாகல் |
| 09 | திரிகைக் கல் | 2015.06.12 | அன்பளிப்பு | 2015.10.1 | 2015.07.13 | குருநாகல் |
| 10 | 2 சோடி கழுத்து மணிகள் | 2015.09.10 | அன்பளிப்பு | 2015.22.1<br>2015.22.2 | 2015.11.09 | மாத்தறை |
| 11 | ஏழு அடி சாந்திக்காக அணியும் சட்டை | 2015.09.10 | அன்பளிப்பு | 2015.23.1 | 2015.11.09 | மாத்தறை |
| 12 | தொவில் ஆட்டத்தில் அணியும் ஆடையின் 04 பாகங்கள் | 2015.09.10 | அன்பளிப்பு | 2015.24.1<br>2015.24.2<br>2015.24.3<br>2015.24.4 | 2015.11.09 | மாத்தறை |
| 13 | ஒரு சோடி சிலம்பு | 2015.09.10 | அன்பளிப்பு | 2015.25.1<br>2015.25.2 | 2015.11.09 | மாத்தறை |
| 14 | 02 பாதப் பட்டிகள் | 2015.09.10 | அன்பளிப்பு | 2015.26.1<br>2015.26.2 | 2015.11.09 | மாத்தறை |
| 15 | சாந்திக்காக அணியப்படும் ஆடை | 2015.09.10 | அன்பளிப்பு | ஆவணப்படுத்தலுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. | பதிவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது | மாத்தறை |
| 16 | 02 கிகிரிக் காப்புகள் | 2015.09.10 | அன்பளிப்பு | ஆவணப்படுத்தலுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. | பதிவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது | மாத்தறை |
| 17 | தாங்குல் தொப்பி | 2015.09.10 | அன்பளிப்பு | ஆவணப்படுத்தலுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. | பதிவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது | மாத்தறை |
| 18 | சுத்த மாத்திரை ஆடைகள் | 2015.09.10 | அன்பளிப்பு | ஆவணப்படுத்தலுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. | பதிவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது | மாத்தறை |
| 19 | முக அலங்காரங்கள் | 2015.09.10 | அன்பளிப்பு | ஆவணப்படுத்தலுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. | பதிவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது | மாத்தறை |
| 20 | 03 துணி இடைப்பட்டிகள் | 2015.09.10 | அன்பளிப்பு | ஆவணப்படுத்தலுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. | பதிவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது | மாத்தறை |
| 21 | 03 முத்து இடைப்பட்டிகள் | 2015.09.10 | அன்பளிப்பு | ஆவணப்படுத்தலுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. | பதிவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது | மாத்தறை |
| 22 | பித்தளைத் தொழிலுக்கான 02 கோவுகள் | 2015.09.03 | அன்பளிப்பு | ஆவணப்படுத்தலுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. | பதிவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது | கண்டி |
| 23 | பித்தளை மினுக்கும் 05 சக்கரங்கள் | 2015.09.03. | அன்பளிப்பு | ஆவணப்படுத்தலுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. | பதிவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது | கண்டி |
| 24 | பித்தளைத் தொழிலுக்கான அமரி சக்கரம் | 2015.09.03 | அன்பளிப்பு | ஆவணப்படுத்தலுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. | பதிவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது | கண்டி |
| 25 | டிரங்க் பெட்டி | 2015.12.08 | அன்பளிப்பு | ஆவணப்படுத்தலுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. | பதிவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது | கம்பஹா |
| 26 | தாச்சி | 2015.12.08 | அன்பளிப்பு | ஆவணப்படுத்தலுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. | பதிவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது | கம்பஹா |

**(ஆ) ஆய்வுகள்**

தொழில்நுட்ப உலகில் சர்வதேச ரீதியாக பல சவால்களை எதிர்நோக்குகின்ற கைத்தொழில்கள் பற்றிய விபரங்களைச் சேகரிப்பதன் நோக்கத்துடன், ஆரம்ப கட்டமாக “தொழில்நுட்ப உலகில் இலங்கைப் பித்தளைக் கைத்தொழில்” என்னும் தலைப்பில் பித்தளைக் கைத்தொழில் தொடர்பான ஆய்வுகள். மேற்கொள்ளப்பட்டன.

**(இ) வெளிக்களப் பிரயாணங்கள்**

கண்டி மாவட்டத்தில் உடுநுவர மற்றும் யட்டிநுவர பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் பித்தளைக் கைத்தொழில் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்வதற்கான பிரயாணங்கள்.

**(ஈ) நடமாடும் கண்காட்சிகள்**

| தொடர் இலக்கம் | கண்காட்சியின் பெயர் | கண்காட்சி நடைபெற்ற காலம் | கண்காட்சி நடைபெற்ற இடம் |
|---|---|---|---|
| 01 | முகமூடிகள் கண்காட்சி | 2015.04.01 தொடக்கம் 2015.04.04 வரை | இர/பலாங்கொடை ஆனந்த மைத்திரிய ம.மகா வித்தியாலயத்தில் தொழில்நுட்ப விஞ்ஞானக் கல்விக் கண்காட்சி |
| 02 | முகமூடிகள் கண்காட்சி | 2015.09.09 தொடக்கம் 2015.09.12 வரை | வடமத்திய மாகாண சபை வளாகத்தில் இடம்பெற்ற கலை விழா 2015 |

**(உ) வெளிவாரி சேவைகள்**

- பல்கலைக் கழகங்கள் மற்றும் பாடசாலைகளில் கல்வி கற்கும் உள்நாட்டு வெளிநாட்டு மாணவர்களின் ஆய்வுகளுக்கு அவசியமான தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்

**(ஊ) ஏனைய நடவடிக்கைகள்**

- மானிடவியல் அரும்பொருட்களின் சேகரிப்புக்களுள் 441 பொருட்களுக்கான தகவல் தொகுதியினைத் தயாரித்தல்
- மானிடவியல் பிரிவின் தரவுகள் கூறு தற்காலப்படுத்தப்படல்.

**<u>(ஆ) விஞ்ஞானம் சார்ந்த பிரிவுகள் :-</u>**

தாவரவியல், பூச்சியியல், புவிச்சரிதவியல், விலங்கியல் ஆகிய பிரிவுகள் இதனுள் அடங்கும். அவ்வப் பிரிவுகளைச் சார்ந்த பொருட்கள், மாதிரிகளைச் சேகரித்தல், பராமரித்தல், காட்சிப்படுத்தல், அப்பொருட்களினதும், மாதிரிகளினதும் ஆய்வுகளை மேற்கொள்ளும் அறிஞர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், பொதுமக்களுக்கு அறிவூட்டல் ஆகிய பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

(1) தாவரவியல் பிரிவு

**(அ) குறிப்பிட்ட வருடத்தினுள் சேகரிப்புக்களும், அறிமுகப்படுத்துதலும், ஆவணப்படுத்துதலும்**

2015.12.11 ஆந் திகதி புத்தளத்தில் அறுவக்காலு ஹொல்சிம் நிறுவனத்திற்கருகாமையிலுள்ள உலர் வலயத் தாவரங்களின் மாதிரிகள்

| | | |
|---|---|---|
| Aquilaria agallocha | Celosia argentea | Morinda coreia |
| Aristolochia indica | Frimbristylis spp.(family-cyperaceae) | Phoenix pusilla |
| Bauhinia racemosa | Ixora coccinea | Toddalia aculeate |

(அறிமுகப் படுத்தப்பட்டது. – திரு. சரத் ஏக்கநாயக்க IUCN)

**(ஆ) வெளிக்களப் பிரயாணங்கள்**

- ஜுலை 29 ஆம் 30 ஆம் திகதிகளில் இரத்தினபுரி தேசிய நூதனசாலையில் உயிரின வகைகள் பூங்காவில் தாவரங்களைத் தற்காலப்படுத்துதலுக்கான பிரயாணம்.
- டிசம்பர் 11 ஆம் திகதி புத்தளம் அறுவக்காலு ஹொல்சிம் நிறுவனம் - உலர் வலயத் தாவரங்களின் மாதிரிகளைச் சேகரித்தலுக்கான பிரயாணம்

**(இ) நடமாடும் கண்காட்சிகள்**

- மே 18 ஆம் 19 ஆம் 20 ஆம் திகதிகளில் சர்வதேச நூதனசாலைகள் தினத்தை முன்னிட்டு வெலிஓயா கிரிஇப்பன்வெவ வித்தியாலயத்தில் தாவரவியல் நடமாடும் கண்காட்சிகள் நடாத்தப்பட்டன.

**(ஈ) செயலமர்வுகளும், கருத்தரங்குகளும்**

- 2015 ஆம் ஆண்டில் தாவரவியல் பிரிவும் கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவும் இணைந்து 19 செயலமர்வுகளும், கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன.

**(உ) ஏனைய நடவடிக்கைகள்**

- நூதனசாலைப் பூங்காவைப் பராமரித்தலும், கண்காணித்தலும் பற்றி குறித்த வெளியார் நிறுவனத்திற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.
- கொழும்பு தேசிய நூதனசாலையில் பசுமைக்கூடம் அமைக்கப்பட்டது.
- கொழும்பு தேசிய நூதனசாலையில் குறிப்பிடப்பட்ட இடங்களுக்கான சமிக்ஞைப் பலகைகள் நிறுவப்பட்டன.
- தேசிய இயற்கையியல் நூதனசாலையின் தாவரவியல் விஞ்ஞான கூடத்தில் காட்சிப் பலகைகள் நவீனமயப்படுத்திப் பூர்த்தி செய்யப்பட்டது.
- மாகம்புர றுஹுணு மரபுரிமை நூதனசாலையின் பூங்காவைத் தயாரித்தலுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

(2) **பூச்சியியல் பிரிவு**

**(அ) குறிப்பிட்ட வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சேகரிப்புகளும், ஆவணப்படுத்தல்களும்**

- யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து பெற்றுக் கொண்ட மாதிரிக் கிருமிகள் 06 பதிவு செய்யப்பட்டன.

  Erythrina gall wasp (Quadra stichus erythrinae) ஆண் கிருமிகள் 03, பெண் கிருமிகள் 03
- புத்தளம் அறுவக்காலு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள ஆய்வுகளின் போது ஆறு கோத்திரங்களுக்குரிய 103 மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

Order -Hymenopetera

Lepidoptera

Othoptera

Odonata

Mantidae

Hemoptera

Coleoptera

**(ஆ) பேணிப்பாதுகாக்கப்பட்ட பொருட்களும், மாதிரிகளும்**

- இயற்கையியல் விஞ்ஞான நூதனசாலையின் பூச்சியியல் கூடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரிகளைச் சுத்திகரித்தலும், பேணிப்பாதுகாத்தலும் மேற்கொள்ளப்பட்டது. கிருமிகளின் சேகரிப்பும் (தென்னைக் கிருமிகள், நெற் கிருமிகள், பழக் கிருமிகள், மரக்கறிக் கிருமிகள்) மேற்கொள்ளப்பட்டது.

**(இ) நடமாடும் கண்காட்சிகள்**

- பூச்சியியல் பிரிவினால் இவ்வருடத்தில் 04 நடமாடும் கண்காட்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.

**(ஈ) செயலமர்வுகளும், கருத்தரங்குகளும்**

- 2015.01.12 ஆம் திகதி, 2015.03.02 ஆம் திகதிகளில் களனிப் பல்கலைக் கழகத்தில் உல்லாசத்துறை, கலாச்சார, வளங்கள் முகாமைத்துவப் பட்டப்படிப்பு மாணவர்கள் சிலருக்கு செயன்முறைப் பயிற்சிகள் வழங்கப்பட்டமை.
- 2015.08.27 ஆம் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் உல்லாசத்துறை, கலாச்சார, வளங்கள் முகாமைத்துவப் பட்டப்படிப்பு மாணவர்கள் சிலருக்கு செயன்முறைப் பயிற்சிகள் வழங்கப்பட்டமை.
- 2015.02.23 ஆம் திகதி தொடக்கம் 2015.03.06 ஆம் திகதி வரை றுஹுணு பல்கலைக் கழக மாணவர்கள் சிலருக்காக பூச்சியியல் நாமங்கள் பற்றிய செயன்முறைப் பயிற்சிகள் வழங்கப்பட்டமை.
- 2015.04.08 ஆம் திகதி களனிப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறை மாணவர்கள் சிலருக்கு செயன்முறைப் பயிற்சிகள் வழங்கப்பட்டமை.

**(உ) வெளிவாரிச் சேவைகள்**

- 2015.02.15 ஆம் திகதி நாவல திறந்த பல்கலைக் கழக மாணவி Bணிகா குணசேகரவுக்கு ஆய்வுகளுக்கான வசதிகளை வழங்கியமை.
- 2015.11.03 ஆந் திகதி கொழும்பு பல்கலைக் கழக மாணவன் அகஸ்திய தொட்டகமுவவுக்கு ஆய்வுகளுக்கான வசதிகளை வழங்கியமை.

**(3) புவிச்சரிதவியல் பிரிவு**

**(அ) குறிப்பிட்ட வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சேகரிப்புகள்**

- மயோசின் எச்சங்களின் சேகரிப்பு - அறுவக்காலு ஹொல்சிம் நிறுவனம்

**(ஆ) வெளிக்களப் பிரயாணங்கள்**

- புவிச்சரிதவியல் கண்காட்சிக்கூடங்களை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக, காட்சிப் பொருட்களைத் தயாரிப்பதற்கான தகவல்களைச் சேகரிப்பதற்காகவும், புகைப்படங்கள் எடுப்பதற்காகவும் 2015.05.11 ஆந் திகதி இரத்தினபுரி குருவிட்ட பிரதேசத்திற்குப் பிரயாணம் மேற்கொண்டமை.
- அறுவக்காலு ஹொல்சிம் நிறுவனத்தினரால் சேகரிக்கப்பட்ட மயோசின் எச்சங்களைப் பரிசீலனை செய்வதற்கும், அவற்றை நூதனசாலையின் புவிச்சரிதவியல் பிரிவிற்கு கையேற்பது தொடர்பான நடவடிக்கைகளுக்காகவும் அறுவக்காலு ஹொல்சிம் நிறுவனத்திற்கு 2015.12.11 ஆந் திகதி பிரயாணம் மேற்கொண்டமை.
- புவிச்சரிதவியல் கண்காட்சிக்கூடங்களை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக, காலி ஹியாரே பிரதேசத்திற்கு 2015.09.29 ஆந் திகதி பிரயாணம் மேற்கொண்டமை.

**(இ) நடமாடும் கண்காட்சிகள்**

- புவிச்சரிதவியல் பிரிவினால் இவ்வருடத்தில் 03 நடமாடும் கண்காட்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.

**(ஈ) நிரந்தரக் கண்காட்சிகள்**

- புவிச்சரிதவியல் பிரிவின் நிரந்தரக் கண்காட்சிக்கூடத்தின் நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**(உ) வெளிவாரி சேவைகள்**

- புவிச்சரிதவியல் பிரிவினால் 2015 ஆம் ஆண்டில் புவிச்சரிதவியல் சான்றுகள் பற்றிய ஆய்வுகளில் ஈடுபடும் 04 பல்கலைக்கழக மாணவர்களுக்கு தகவல்கள் மற்றும் ஒத்துழைப்பும் வழங்கப்பட்டன.

(4) விலங்கியல் பிரிவு

**(அ) குறிப்பிட்ட வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட சேகரிப்புகள்**

- நீதிமன்றங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட விலங்குகளின் மாதிரிகள், விலங்குகளின் பகுதிகள் என்பவற்றை இனங்காணலும், அவற்றைப் பெற்றுக் கொள்ளலும்.
- தீர்மானிக்கப்பட்டுள்ள அஸ்திகள் விஞ்ஞான கூடத்திற்குத் தேவைப்படும் மலைப்பாம்பு, ஏரி மான், மரை, டொல்பின்கள், புடையன் பாம்பு ஆகிய பிராணிகளின் மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளல்.
- நடமாடும் கண்காட்சிகளுக்காக வி'ப்பாம்புகளின் மாதிரிகளை கொழும்பு வைத்தியக் கல்லூரியிலிருந்து பெற்றுக் கொள்ளல்.

**(ஆ) அறிமுகப்படுத்துதலும், ஆவணப்படுத்துதலும்**

- நாட்டின் பல பகுதிகளிலும் நீதிமன்றங்களிலிருந்து பெறப்பட்ட விலங்குகளின் மாதிரிகள், விலங்குகளின் பகுதிகள் என்பவற்றை இனங்காணலும், அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களை ஆவணப்படுத்துதலும்.
- ஆய்வாளர் கலாநிதி கனிஸ்க உக்குவெல அவர்கள் வழங்கிய கடல் பாம்புகளின் மாதிரிகளை ஆய்வுக்குட்படுத்தி ஆவணப்படுத்துதல்.
- ஆய்வாளர் திரு. மென்டிஸ் விக்கிரமசிங்ஹ அவர்கள் வழங்கிய தவளைகளின் மாதிரிகளை ஆய்வுக்குட்படுத்தி ஆவணப்படுத்துதல்.
- ஆய்வாளர் கலாநிதி மாதவ மீகஸ்கும்புர அவர்கள் வழங்கிய மீன்களின் மாதிரிகளை ஆய்வுக்குட்படுத்தி ஆவணப்படுத்துதல்.

**(இ) பேணிப்பாதுகாக்கப்பட்ட பொருட்களும், மாதிரிகளும்**

- விலங்கியல் இரசாயன கூடத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஈரப்பத மாதிரிகளை பேணிப்பாதுகாத்தல்
- விலங்கியல் இரசாயன கூடத்தில் வைக்கப்பட்டிருக்கும் WHT ஈரப்பத மாதிரிகளை பேணிப்பாதுகாத்தல்
- ஊர்வனவற்றின் மாதிரிகள் சேகரிப்பினைச் சுத்திகரித்தலும், பேணிப்பாதுகாத்தலும்.
- இயற்கையியல் விஞ்ஞான நூதனசாலையிலுள்ள விலங்கு மாதிரிகளைப் பராமரித்தலும், தற்காலப்படுத்தலும்.
- நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் அஸ்திகள் விஞ்ஞானகூடத்திற்குத் தேவையான மலைப்பாம்பு, ஏரி மான், மரை, டொல்பின்கள், புடையன் பாம்பு ஆகிய விலங்குகளின் எலும்புக்கூடுகள் தயாரித்தல்.
- தேசிய நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த நீலத் திமிங்கிலத்தின் எலும்புக்கூட்டினை தேசிய இயற்கையியல் நூதனசாலை அஸ்திகள் கூடத்தில் காட்சிக்காக அமைத்து பூர்த்தி செய்யப்பட்டமை.

**(ஈ) வெளிக்கள பிரயாணங்கள்**

- தீர்மானிக்கப்பட்டுள்ள அஸ்திகள் விஞ்ஞான கூடத்திற்குத் தேவைப்படும் விலங்கு மாதிரிகளை கொண்டு வருவதற்காக காலி ஹியாரே வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் செல்லல்.

**(உ) நிரந்தர, தற்காலிக மற்றும் நடமாடும் கண்காட்சிகள்**

- 2015 ஆம் ஆண்டில் 05 நிரந்தர, தற்காலிக மற்றும் நடமாடும் கண்காட்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.

**(ஊ) செயலமர்வுகளும், கருத்தரங்குகளும்**

- கொழும்பு பல்கலைக் கழகம் மற்றும் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழக உயிரியல் பீட மாணவர்களுக்கு கருத்தரங்குகளும், ஆய்வுகளும் நடாத்தப்பட்டன.

**(எ) வெளிவாரிச் சேவைகள்**

- பல்கலைக் கழக மாணவி எல்.எம். விஜேசுந்தரவுக்கு நன்னீர் மீன்களின் சேகரிப்பினை வழங்கி கல்விக்கான ஒத்துழைப்பு வழங்கியமை.
- ஆய்வாளர் திரு. சமீர கருணாரத்ன அவர்களுக்கு WHT விலங்குகளின் மாதிரிகள் சேகரிப்பினை வழங்கி கல்விக்கான ஒத்துழைப்பு வழங்கியமை.
- ஆய்வாளர் திரு. துலான் விதானபதிரண அவர்களுக்கு செண்பகங்களின் மாதிரிகள் சேகரிப்பினை வழங்கி கல்விக்கான ஒத்துழைப்பு வழங்கியமை.
- கலாநிதி என்.பீ.எஸ். கும்புரேகம அவர்களுக்கு குணக்கட்டு பாம்பு வகையின் மாதிரிகள் சேகரிப்பினை வழங்கி கல்விக்கான ஒத்துழைப்பு வழங்கியமை.
- கலாநிதி டினசாட் ரஹீம் அவர்களுக்கு நத்தைஓடு மாதிரிகள் சேகரிப்பினை வழங்கி கல்விக்கான ஒத்துழைப்பு வழங்கியமை.

**(ஏ) ஏனைய நடவடிக்கைகள்**

- இயற்கையியல் விஞ்ஞான நூதனசாலையின் விலங்கியல் கூடத்திலுள்ள ஓணான், பல்லி, பாம்பு ஆகிய பிராணிகளின் சேகரிப்பினை தற்காலப்படுத்துதல்.
- இயற்கையியல் விஞ்ஞான நூதனசாலையின் விலங்குகளின் மாதிரிகளை தோல் சிற்பப் பிரிவின் மூலம் தற்காலப்படுத்துதல்.
- இயற்கையியல் விஞ்ஞான நூதனசாலை கடல் நத்தைகளின் கூடத்தினை புவிச்சரிதவியல் கூடத்திற்கு மாற்றப்படுவதற்காக நத்தைஓடுகளை அகற்றுதல்.
- WHT விலங்கியல் மாதிரிகளின் சேகரிப்பினை வெளி ஆய்வாளர்களைக் கொண்டு இனங்காணல்.

## (7) கல்வி, கல்வி வெளியீட்டு பிரிவு :-

### (அ) கல்விக் கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் விரிவுரைகள்

கல்வி கல்வி வெளியீட்டுப் பிரிவின் மூலம், இவ்வருடத்தில் 14 பாடசாலைகளில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான கருத்தரங்குகள் மற்றும் இலங்கை வரலாறு, கலைகள் போன்ற விடயங்களுக்கான கல்விக் கருத்தரங்குகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. அவை கீழே காட்டப்பட்டுள்ளன.

**கல்விக் கருத்தரங்குகள்**

| திகதி | இடம் |
|---|---|
| 2015.05.19 | கிரிஇப்பன்வெவ மகா வித்தியாலயம், வெலிஓயா |
| 2015.05.26 | கிறிஸ்துராஜ தேசிய பாடசாலை, துடெல்ல |
| 2015.05.27 | புனித மரியாள் மகா வித்தியாலயம், ஜாஎல |
| 2015.06.22 | சொரகுணே மகாவித்தியாலயம், ஹல்துமுல்ல |
| 2015.06.24 | வேகொவ்வ மகா வித்தியாலயம், மினுவாங்கொடை |
| 2015.06.25 | மகிந்த வித்தியாலயம், கொழும்பு 10 |
| 2015.07.02 | பிட்டியேகெதர ஆரம்ப பாடசாலை, கம்பஹா |
| 2015.07.04 | கிரிஇப்பங்வெவ மகா வித்தியாலயம், வெலிஓயா |
| 2015.07.05 | பதவி ஜயந்தி மகா வித்தியாலயம், பதவிஸ்ரீபுர |
| 2015.07.07 | மூகலன்கமுவ பண்டாரநாயக்கா வித்தியாலயம், சீதுவை |
| 2015.07.09 | வலகம்பா மகா வித்தியாலயம், அலுதேபொல |
| 2015.07.13 | மஹவில கனிஷ்ட வித்தியாலயம், பாணந்துறை |
| 2015.07.14 | மாறபொல வித்தியாலயம், மாறபொல |
| 2015.07.16 | பௌத்த மகா வித்தியாலயம், நிட்டம்புவ |

### (ஆ) நூதனசாலை நடமாடும் கண்காட்சிகள்

இவ்வருடத்தினுள் கல்வி, கல்வி வெளியீட்டுப் பிரிவின் மூலம், 18 நடமாடும் கண்காட்சிகளும், 02 நடமாடும் புத்தகக் கண்காட்சிகளும் நடாத்தப்பட்டன.

### (இ) வெளியீட்டு நடவடிக்கைகள்

இவ்வருடத்தினுள் கல்வி, கல்வி வெளியீட்டுப் பிரிவின் மூலம், கீழ்க்காணும் வெளியீடுகள் அச்சிடப்பட்டு வெளியிபட்டன.

- நூதனசாலை சஞ்சிகையின் 18 ஆம் இதழ்
- A Guide To The Magampura Ruhunu Heritage Museum Hambantota
- மாகம்புர றுஹுணு மரபுரிமை நூதனசாலை பற்றிய துண்டுப் பிரசுரம் (சிங்களம், தமிழ்)
- மாகம்புர றுஹுணு மரபுரிமை நூதனசாலைக்கான அழைப்பிதழ்

- இலங்கையின் பாரம்பரிய விவசாயம் - (மீள் பதிப்பு)
- வர்ண அட்டைப் படங்கள் 300,000 - (மீள் பதிப்பு)
- சாரார்த்த சஞ்சிகை - (மீள் பதிப்பு)
- மகாவம்சம் ஆரம்ப தொகுதி - (மீள் பதிப்பு)
- மகாவம்சம் இரட்டைத் தொகுதி - (மீள் பதிப்பு)
- 2014 தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையும், இறுவட்டமும் அச்சிடல்.

**(ஈ) ஏனைய நடவடிக்கைகள்**

- நடமாடும் நூதனசாலை பஸ் வண்டியின் வெளித் தோற்றத்தினை நவீனமயப்படுத்துதலும், பஸ் வண்டியின் உடற்பகுதியில் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு ஒழுங்கமைத்தலும்.

**(8) தேசிய நூதனசாலை கேட்போர்கூடம் :-**

2015 ஆம் ஆண்டில் தேசிய நூதனசாலையின் கேட்போர்கூடத்தினை 23 வெளி நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டதன் மூலம் பெற்றுக் கொண்ட மொத்த வருமானம் ரூபா 644,000.00 ஆகும்.

**(9) தேசிய நூதனசாலை நூலகம் :-**

**(அ) கைப்பற்றல்கள்**

இவ்வருடத்தினுள் தேசிய நூதனசாலைகள் திணைக்கள நூலகத்தினால் கைப்பற்றப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை 9335 ஆகும்.

**(ஆ) புத்தகம் கட்டுதல், நுண்படச்சுருள் மயப்படுத்துதல் மற்றும் நிழற்பிரதிகள்**

இவ்வருடத்தினுள் நூலகத்தின் மூலம் வாசகர்களுக்கு 9559 நிழற்பிரதிகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

**(இ) வாசகர்களின் எண்ணிக்கை**

இவ்வருடத்தினுள் தேசிய நூதனசாலை நூலகத்தில் நிரந்தர அங்கத்துவம் பெற்றவர்களின் எண்ணிக்கை 11 ஆகும். அங்கத்துவத்தைப் புதுப்பித்தவர்களின் எண்ணிக்கை 05 ஆகும். தற்காலிக அங்கத்துவம் பெற்றவர்களின் எண்ணிக்கை 29 ஆகும். அங்கத்துவத்தை தற்காலிகமாக நீடித்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை 02 ஆகும். இவ்வருடத்தினுள் நூலகத்திற்கு வருகை தந்த வாசகர்களின் மொத்த எண்ணிக்கை 3232 ஆகும்.

**(ஈ) வருமானம்**

இவ்வருடத்தினுள் தேசிய நூதனசாலை நூலகத்தின் மொத்த வருமானம் ரூபா 1,97,488.00 ஆகும்.

**(10) புகைப்படப் பிரிவு :-**

இவ்வருடத்தினுள் புகைப்படப் பிரிவின் மூலம்,

- புகைப்படம் எடுத்த எண்ணிக்கை - 10,790
- இறுவட்டம் தயாரித்த எண்ணிக்கை (CD) - 10,790
- நூதனசாலை நூலகத்திலுள்ள ஆவணங்களைப் புகைப்படம் எடுத்த எண்ணிக்கை - 541
- அரும்பொருட்களின் புகைப்படம் எடுத்த எண்ணிக்கை - 180
- திணைக்களப் பிரிவுகளில் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் விநியோகம் - 1487

**(11) பேணிப்பாதுகாத்தல் பிரிவு :-**

**2015ஆம் ஆண்டில் பேணிப்பாதுகாக்கப்பட்ட பொருட்கள் :**

**(01) புத்தகங்களின் பேணிப் பராமரித்தல்கள்**

- நூலகத்திலுள்ள நூல் சேகரிப்பின் 100க்கும் மேற்பட்ட ஏட்டுஓலைகள், 101 ஏட்டுச்சுவடிகள் யாவும் தூசி நீக்கப்பட்டு பேணிப் பராமரிக்கப்பட்டன.
- 5000 புராதன நூல்கள் புகையூட்டப்பட்டுப் பராமரிக்கப்பட்டன.
- மிகவும் மோசமான நிலையிலிருந்த 12 நூல்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டன.
- நூதனசாலையின் ஏனைய பிரிவுகளிலுள்ள 145 நூல்கள், ஆவணங்கள் கட்டப்பட்டுப் பராமரிக்கப்பட்டன.

**(02) மர அரும்பொருட்களின் பேணிப் பராமரித்தல்கள்**

- ஒல்லாந்த நூதனசாலையின் ஜன்னல் மற்றும் 08 வீட்டுத் தளபாட அரும்பொருட்கள் பேணிப் பராமரிக்கப்பட்டன.
- மனித இனயியல் பிரிவிலுள்ள 02 மரத் தளபாட அரும்பொருட்கள் பேணிப் பராமரிக்கப்பட்டன.
- மானிடவியல் பிரிவிலுள்ள 34 மரத் தளபாட அரும்பொருட்கள் பேணிப் பராமரிக்கப்பட்டன.

**(03) செம்பு, உலோகம் கலந்த செம்பு அரும்பொருட்களின் பேணிப் பராமரித்தல்கள்**

- 656 நாணய அரும்பொருட்கள் பேணிப் பராமரிக்கப்பட்டன.
- வேறு அரும்பொருட்களும் பேணிப் பராமரிக்கப்பட்டன.

**(04) வரைபடங்கள், ஓவியங்கள் மற்றும் புகைப்படங்களின் பேணிப் பராமரித்தல்கள்**

- 07 ஓவியங்கள் பேணிப் பராமரிக்கப்பட்டன.
- கொழும்பு தேசிய நூதனசாலை ஓவியக் கூடத்தில் ‘‘திம்புலாகல மாராவீதியில்’’ என்னும் 02 ஓவியங்கள் பேணிப் பராமரிக்கப்பட்டன.

**(05) ஏனைய அரும்பொருட்களின் பேணிப் பராமரித்தல்கள்**

- அம்பாந்தோட்டை நூதனசாலையில் 202 அரும்பொருட்கள் பேணிப் பராமரிக்கப்பட்டன.
- கொழும்பு தேசிய நூதனசாலை கற்சிற்பக் கூடத்தில் 15 கற்சிற்பங்கள் பேணிப் பராமரிக்கப்பட்டன.
- மத்திய கலாசார நிதியத்துக்குரிய "கருமுனி வளவ்வ" என்னுமிடத்திலுள்ள 25 ஆடை அரும்பொருட்கள் பேணிப் பராமரிக்கப்பட்டன.

**(06) நூதனசாலைகளில் பூச்சிகள், கிருமிகள், களைகள் ஆகியவற்றை நீக்கும் நடவடிக்கைகள்**

- கொழும்பு மற்றும் ஏனைய நூதனசாலைகளில் கறையான் பரவுதலைத் தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்
- கட்டிடங்களின் மீது வளரும் களைகளை அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

**(07) ஏனைய நடவடிக்கைகள்**

- அரும்பொருட்களின் கூடங்கள் மற்றும் களஞ்சியசாலைகளில் ஒளி, ஈரலிப்புத் தன்மை ஆகியவற்றைப் பரிசீலித்து அறிக்கை தயாரித்தல்
- மத்திய கலாசார நிதியத்துடன் இணைந்து கொழும்பு தேசிய நூதனசாலை கற்சிற்பக் கூடத்தில் உள்ள புத்தர் சிலைகளின் தன்மை பற்றி அறிக்கை தயாரித்தல்
- தேசிய சேமிப்பு வங்கி பிரதான அலுவலகத்திலுள்ள புத்தகங்களுக்கு புகையூட்டல் மற்றும் பொருட்களைப் பேணிப் பராமரித்தலுக்கான ஆலோசனைகள் வழங்குதல்.
- ஜே.ஆர.ஜயவர்தன கேந்திர நிலையத்தின் மரத் தளபாடங்கள் மற்றும் ஏனைய சுற்றாடலைப் பேணுவதற்கான ஆலோசனைகள் வழங்குதல்.
- டவர் ஹோல் நாட்டிய அரங்கு தாபனத்தின் கீழ் இயங்கும் ருக்மணிதேவி நூதனசாலையிலுள்ள அரும்பொருட்களை மேற்பார்வையிடலும், அங்குள்ள ஓவியங்கள் பற்றி அறிக்கை தயாரித்தலும்.
- அழகியற்கலை பல்கலைக் கழகத்தில் திரு. டேவிட் பேன்டர் அவர்களின் ஓவியங்களைப் பரிசீலித்து அறிக்கை தயாரித்தல்.
- பொலிஸ் தலைமையக சங்கீதப் பிரிவில் நூதனசாலை ஆவணங்களை களஞ்சியப் படுத்துவதற்கான ஆலோசனைகள் வழங்குதல்.

**<u>(12) கண்காட்சிகளின் திட்டமிடல் பிரிவு :-</u>**

- இரத்தினபுரி தேசிய நூதனசாலையில் ஆரம்ப வரலாற்று மனிதர்களின் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டமை.
- கொழும்பு தேசிய நூதனசாலையில் வேடுவ காட்சிக்கூடத்தின் எஞ்சிய நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டமை
- விவசாயக் கூடத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்தமை.
- புவிச்சரிதவியல் கூடத்திற்கு அவசியமான புகைப்படங்களைப் பெற்றுக்கொள்வதற்காக காலி ஹியாரே காப்பகத்திற்கும் இரத்தினபுரிக்கும் செல்லல்
- நூதனசாலை நூலகத்திற்குத் தேவைப்படும் அலுமாரிகளின் திட்ட வரைபடங்கள் பெற்றுக்கொடுத்தமை
- பூங்காவிற்குத் தேவைப்படும் வழிகாட்டிப் பெயர்ப்பலகைகள் தயாரித்தமை
- அஸ்திகள் கூடத்திலுள்ள திமிங்கிலத்திற்கு வர்ணம் பூசுதல்
- இரத்தினபுரி தேசிய நூதனசாலைக்கு கற்குகைகள் தயாரித்து வழங்கியமை
- ஒல்லாந்த நூதனசாலையின் நுழைவுச்சீட்டு கருமபீடத்தைத் தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியமை

- புவிச்சரிதவியல் கூடத்திற்குத் தேவைப்படும் மிருகங்களின் மாதிரி உருவங்கள் தயாரித்தமை
- சித்திரக் கூடத்தை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமை

**(13) <u>தகவல் தொழில்நுட்பப் பிரிவு :-</u>**

ஆவணப்படுத்தற் பிரிவின் மூலம் இவ்வருடத்தினுள் கீழ்க் காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் இணையத்தளத்திற்கான புதிய செய்திகள், பணிக்குழுவினர் தகவல்கள், வெற்றிடங்கள், கேட்போர் கூடத்தினை முன்கூட்டிப் பதிவு செய்தல், நூதனசாலைச் சுற்றுலா போன்ற விடயங்களை தேவைக்கேற்றவாறு தற்காலப்படுத்தல்.
- தேசிய நூதனசாலைகள் திணைக்களப் பணிக்குழுவினரின் தகவல்கள் அடங்கிய தரவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு, இடமாற்றம், பதவியுயர்வு போன்றவற்றை தேவைக்கேற்றவாறு தற்காலப்படுத்துதல்.
- மேற்குறிப்பிட்ட 2 ஆம் விடயத்தின் தகவல்கள் தேவைப்படும் அலுவலர்களுக்கு வழங்குதல்.
- பூச்சியியற் பிரிவிற்கு அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்ற கைப்பற்றல்களான 7 மாதிரிகள், விலங்கியற் பிரிவிற்கு அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்ற கைப்பற்றல்களான 61 மாதிரிகள், உயர்நீதிமன்றத்தினால் அனுப்பப்பட்டிருந்த 3 மாதிரிகள், இயற்கையியல் பிரிவில் உள்ள 71 மாதிரிகள் (இல. 2015.01.01 NH - 2015.02.19 NH) ஆகியவை இயற்கையியல் மத்திய கைப்பற்றல் ஆவணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- மனித இனயியல் பிரிவிற்கு அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்ற கைப்பற்றல்களான 6 மாதிரிகள், கொள்வனவு செய்யப்பட்ட ஒரு அரும்பொருள், மானிடவியல் பிரிவிற்கு அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்ற கைப்பற்றல்களான 35 மாதிரிகள், கலைப் பிரிவில் உள்ள 42 அரும்பொருட்கள் (இல. 2015.01.01 - 2015.02.26) கலைப் பிரிவின் மத்திய கைப்பற்றல் ஆவணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- மேற்குறிப்பிட்ட 4 ஆம் 5 ஆம் விடயங்களுக்குரிய அன்பளிப்புகளுக்கான சான்றுப்பத்திரங்கள் வழங்கப்பட்டமை.
- திணைக்களத்தின் கணினிகளைப் பராமரித்தல், வைரஸ் பாதுகாப்பு மென்பொருள் ஆகியவை தொடர்பான விடயங்களை முகாமைத்துவம் செய்தல்.

**(14) நூதனசாலை நடவடிக்கைகள் :-**

**அ) கொழும்பு தேசிய நூதனசாலை**

1877 ஆம் ஆண்டு தொடக்கம் பொதுமக்களின் கண்காட்சிக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கும் கொழும்பு தேசிய நூதனசாலையின் முன்புறத்தில் மறுசீரமைப்பு மற்றும் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் இவ்வருடமும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. இது தவிர, சிற்பக் கண்காட்சிக் கூடத்தில் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளும், பாதுகாப்புக் கருதி நூதனசாலைக் கதவுகளுக்கு இரும்புக் கதவுகள் பொருத்தப்படும் நடவடிக்கைகளும் சம்பிரதாய கோட்பாடுகள் கூடத்தின் கண்காட்சிப் பொருட்களை ஒழுங்கமைத்தலும் மேற்கொள்ளப்பட்டன. கல்வி, விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் மாணவர்களின் செயற்றிட்டங்களுக்கான தகவல்கள் வழங்குதலும் மேற்கொள்ளப்பட்டன.

கலாச்சார அலுவல்கள் இராஜாங்க அமைச்சின், கௌரவ அமைச்சர் நந்திமித்திர ஏக்கநாயக்கா அவர்களும், உள்ளக அலுவல்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கௌரவ அமைச்சர் எஸ்.பீ. நாவின்ன அவர்களும் கொழும்பு தேசிய நூதனசாலையைப் பார்வையிடுவதற்காக சமுகமளித்திருந்தனர்.

**ஆ) தேசிய இயற்கையியல் நூதனசாலை**

தேசிய இயற்கையியல் நூதனசாலை மூலம் இவ்வருடத்தில் 11 கல்விக் கருத்தரங்குகளும், விரிவுரைகளும், செயலமர்வுகளும் நடாத்தப்பட்டுள்ளன. பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் செயற்றிட்டங்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் அவசியமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய இயற்கையியல் நூதனசாலையின் புவிச்சரிதவியல் பிரிவு நவீனமயப்படுத்தப்பட்டும், கீழ் மாடியில் ஒரு பகுதி அஸ்திகள் காட்சிக் கூடத்தை விஸ்தரிக்கும் நோக்குடன் நிலத்திற்கு பளிங்குக்கல் பதிக்கப்பட்டும், கீழ் மாடியில் உக்கிப் போயிருந்த ஜன்னல்களை அகற்றி அலுமினியம் ஜன்னல்கள் பொருத்தப்பட்டும், பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது தவிர, புவிச்சரிதவியல் பிரிவின் அலுவலகத்திற்குச் செல்வதற்கான படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டன. அஸ்திகள் காட்சிக்கூடத்தின் புதிய கட்டிட நிர்மாணப்பணிகள் 2015.04.29 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. நூதனசாலைக் கட்டிடத்திற்குள் நுழைவதற்கான வழிகாட்டிப் பெயர்ப் பலகைகள் அமைக்கப்பட்டு வசதிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

**இ) காலி சமுத்திர நூதனசாலை**

காலி சமுத்திர நூதனசாலை மூலம் பாடசாலை மாணவர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் விரிவுரைகள் நடாத்தப்பட்டன. பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் செயற்றிட்டங்களுக்கு அவசியமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**ஈ) கண்டி தேசிய நூதனசாலை**

கண்டி தேசிய நூதனசாலை புனர்நிர்மாணப் பணிகள் காரணமாக இவ்வருடம் மூடப்பட்டு பொதுமக்கள் பார்வைக்காக திறந்திருக்கப்படவில்லை.

இதன் பிரகாரம் 2014.09.15 ஆந் திகதி தொடக்கம் பேணிப்பாதுகாத்தல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கூரையின் புனர்நிர்மாணப் பணி நூற்றுக்கு 70 வீதமும், சுவர்களின் புனர்நிர்மாணப் பணி நூற்றுக்கு 85 வீதமும், நிலத்தின் புனர்நிர்மாணப் பணி நூற்றுக்கு 80 வீதமும், வெளிச்சுற்றுப் பிரகாரத்தின் புனர்நிர்மாணப் பணி நூற்றுக்கு 50 வீதமும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் கட்டிடத்தில் கறையான்கள் பரவுவதைத் தடுக்கும் முகமாக இரசாயன பூச்சிக் கொல்லிகள் பாவிக்கப்பட்டன.

நூதனசாலை வளாகத்தில் கட்டிடங்களின் புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளும் காலப்பகுதியில் புராதன தொல்பொருட்கள் என இனங்காணப்பட்ட பல கட்டிடச் சிதைவுகளை தொல்பொருளியல் கோட்பாட்டின் பிரகாரம் பேணிப் பாதுகாக்கப்பட்டு, ஆய்வுகளுக்குட்படுத்தப்பட்டு பின்னர் காட்சிக்காக வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**உ) ஒல்லாந்த நூதனசாலை**

ஒல்லாந்த நூதனசாலையின் மூலம், இவ்வருடத்தில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் செயற்றிட்டங்களுக்கு அவசியமான தகவல்கள் வழங்கப்படுதலும், விரிவுரைகள் நடாத்தப்படுதலும் மற்றும் சுற்றுலாத்துறை நடத்துநர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன. ஜுன் மாதம் வரலாறு தொடர்பான விடயத்தை இலக்காகக் கொண்டு ரூபவாகினி தொலைக்காட்சி நிறுவனத்தினரால் விவரண நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. தொல்பொருளியல் திணைக்களத்தின் மூலமாக நிதி ஒதுக்கப்பட்டு நூதனசாலையின் சுவர்கள் பழுதுபார்க்கப்பட்டு சித்திரங்களுக்கு வர்ணம் தீட்டப்பட்டன.

**ஊ) இரத்தினபுரி தேசிய நூதனசாலை**

இரத்தினபுரி தேசிய நூதனசாலை மூலம், இவ்வருடத்தில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் செயற்றிட்டங்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் அவசியமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், கல்விக் கருத்தரங்குகளும், கண்காட்சிகளும், செயலமர்வுகளும் நடாத்தப்பட்டுள்ளன.

2015.07.03 ஆந் திகதி மீடியா டிரவல்ஸ் (N.H.K.) தொலைக்காட்சி நிறுவனத்தினரால் சிங்கப் பல் (Lion’s Tooth) என்னும் நிகழ்ச்சிக்கான தகவல்களும், நிழற்படங்களும் சேகரிக்கப்பட்டன.

சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண, பாதை அபிவிருத்தி, கிராமிய அடிப்படை வசதிகள், சுற்றுலா, விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சினால் சப்ரகமுவ மாகாண சபைக்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் மூலம் நூதனசாலையின் பிரதான பாதை மறுசீரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நூதனசாலைத் திணைக்களத்தின் கலாசார நிலையக் கட்டிடத்தின் எஞ்சிய நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நூதனசாலையைச் சுற்றியுள்ள வேலி புதுப்பித்தல் மற்றும் சப்ரகமுவ பிரதேசத்தில் அழிந்து போகக்கூடிய விலங்குகளின் மாதிரிகளைச் சேகரித்து நூதனசாலை வளவில் வைக்கப்படுகின்றன.

**எ) அநுராதபுர நாட்டார் நூதனசாலை**

அநுராதபுர நாட்டார் நூதனசாலை மூலம், இவ்வருடத்தில் பாடசாலை மாணவர்களின் செயற்றிட்டங்களுக்கு அவசியமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், கண்டிப் பிரதேச கிராமிய வாழ்க்கை பற்றிய கல்விக் கருத்தரங்குகளும், செயலமர்வுகளும் நடாத்தப்பட்டுள்ளன. அநுராதபுர நாட்டார் நூதனசாலை அலுவலகத்தின் நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

அநுராதபுர நாட்டார் நூதனசாலையில் காட்சிக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள கிராமிய இல்லத்தின் புதுப்பித்தல் பணி, நூதனசாலையைச் சுற்றி வேலி அமைத்தல் பணி, நூதனசாலையின் ஔடதப் பூங்காவின் நிர்மாணப்பணி ஆகியனவும் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நூதனசாலைப் பூங்காவை அநுராதபுரம் மாநகர சபையின் உதவியுடன் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தயார் படுத்தப்பட்டன. அத்துடன் அநுராதபுர நாட்டார் நூதனசாலை மூலம் நாட்டு மக்களுக்கு ஆசி பெற்றுக் கொள்ளும் முகமாக பிரித் வைபவமும் ஒழுங்கு செய்யப்பட்டன.

**ஏ) காலி தேசிய நூதனசாலை**

காலி தேசிய நூதனசாலை மூலம், இவ்வருடத்தில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் செயற்றிட்டங்களுக்கு அவசியமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், கல்விக் கருத்தரங்குகளும், செயலமர்வுகளும் நடாத்தப்பட்டுள்ளன.

2015.07.01 ஆந் திகதி தேசிய ரூபவாகினி தொலைக்காட்சி நிகழ்ச்சியாகிய ''வாசுலிய'' என்னும் சஞ்சிகை நிகழ்ச்சிக்கான தேவையுடன் ரூபவாகினி தொலைக்காட்சி நிறுவனத்தின் படிப்பிடிப்புக்களுடன், காலி தேசிய நூதனசாலையில் உள்ள இலங்கை சீன நட்புறவுக் கூடம் தொடர்பான விவரணச் செய்தியினை சீன சர்வதேச வானொலிச் சேவை மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒலிபரப்புப் பதிவுகளும் 2015.09.08 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டன.

**ஐ) சுதந்திர ஞாபகார்த்த நூதனசாலை**

சுதந்திர ஞாபகார்த்த நூதனசாலை மூலம், இவ்வருடத்தில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் செயற்றிட்டங்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் அவசியமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், கல்விக் கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டுள்ளன. நூதனசாலையினுள் காற்றோட்டம் உட்செல்வதற்கான Inlet Fan, flexible Hose பொருத்தப்பட்டு இரண்டு காற்றோட்டத் தொகுதிகள் நிர்மாணிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.


(15) 2015 ஆம் வருடத்தின் வருமானங்கள்

| நூதனசாலையின் பெயர் | நுழைவுச்சீட்டு | வெளியீடுகள் | கமரா அனுமதிப்பத்திரம் | கட்டிட வாடகை | ஏனைய | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| கொழும்பு தேசிய நூதனசாலை | 24,854,080.00 | 756,083.00 | 1,452,500.00 | 533,329.94 | 100,920.00 | 27,696,912.94 |
| தேசிய இயற்கையியல் நூதனசாலை | 1,968,385.00 | 1,298.00 | 47,000.00 | - | 143,160.00 | 2,159,843.00 |
| தேசிய நூதனசாலை நூலகம் | - | - | - | - | 197,488.00 | 197,488.00 |
| தேசிய நூதனசாலை கேட்போர் கூடம் | - | - | - | 644,000.00 | - | 644,000.00 |
| ஒல்லாந்த நூதனசாலை | 1,712,570.00 | 2,694.00 | 102,950.00 | - | - | 1,818,214.00 |
| கண்டி தேசிய நூதனசாலை | மறுசீரமைப்பு நடவடிக்கைகள் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. | | | | | |
| காலி தேசிய நூதனசாலை | 1,743,720.00 | 83,771.00 | 57,250.00 | - | - | 1,884,741.00 |
| இரத்தினபுரி தேசிய நூதனசாலை | 298,495.00 | 118,670.00 | 28,750.00 | - | 7,000.00 | 452,915.00 |
| காலி சமுத்திர நூதனசாலை | 1,588,220.00 | 2,915.00 | 86,250.00 | - | - | 1,677,385.00 |
| அநுராதபுர நாட்டார் நூதனசாலை | 130,435.00 | 66,110.00 | 3,750.00 | - | - | 200,295.00 |
| சுதந்திர ஞாபகார்த்த நூதனசாலை | 321,265.00 | 15,010.00 | 10,500.00 | - | - | 346,775.00 |
| மாகம்புர றுஹுணு மரபுரிமை நூதனசாலை | 34,030.00 | 100.00 | - | - | - | 34,130.00 |
| மொத்தம் | 32,651,200.00 | 1,046,651.00 | 1,788,950.00 | 1,177,329.94 | 448,568.00 | 37,112,698.94 |

**2015 ஆம் வருடத்தின் வருமானத்தை 2014 ஆம் வருட வருமானத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தல்**

| வருடம் | நுழைவுச்சீட்டு | வெளியீடுகள் | கமரா அனுமதிப்பத்திரம் | கட்டிட வாடகை | ஏனைய | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2015 | 32,651,200.00 | 1,046,651.00 | 1,788,950.00 | 1,177,329.94 | 448,568.00 | 37,112,698.94 |
| 2014 | 19,967,080.00 | 1,082,183.00 | 2,113,050.00 | 470,625.00 | 841,867.00 | 24,474,805.00 |

2015 ஆம் வருடத்தின் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் மொத்த வருமானம் ரூபா 37,112,698.94 ஆகவும், 2014 ஆம் வருடத்தின் மொத்த வருமானம் ரூபா 24,474,805.00 ஆகவும் பெறப்பட்டுள்ளது.




அட்டவணை இலக்கம் 01 – தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் வருடாந்த வருமானம்

சனுஜா கஸ்தூரிஆரச்சி

தேசிய நூதனசாலைகள் பணிப்பாளர் (பதிற் கடமை)

தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

கொழும்பு 07.



புகைப்படம் - இல. 01



புகைப்படம் - இல. 02